**செய்தி வெளியீடு எண்: 420** **நாள்: 12.07.2019**

**செய்தி வெளியீடு**

| | |
|---|---|
| **2019-2020**–ஆம் கல்வியாண்டிற்கு இளங்கலை பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்ற தகுதிவாய்ந்த மாணவர்கள் அரசு / அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரி மற்றும் கலைக் கல்லூரிகள் / அண்ணா பல்கலைக் கழகம் / துறைகள் / வட்டார மையங்கள் / சென்னை பல்கலைக் கழகம் / இதர பல்கலைகழகங்கள்* / சுயநிதி பொறியியற் கல்லூரிகள் மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை 600025 மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை 600006 அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் எம்.பி.ஏ. / எம்.சி.ஏ. முதுநிலை பட்டப்படிப்பு (MBA/MCA) சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் இணையதள மூலமாக மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும்.<br><br>இணையதள மூலமாக விண்ணப்பிக்க தேவையான நெறிமுறைகள் : | |
| 1. | **விண்ணப்பிக்கும் முறை:** www.gct.ac.in / www.tn-mbamca.com என்ற இணையதள வாயிலாக விண்ணப்பித்தல் வேண்டும்.<br>ஆன்–லைன் மூலமாக விண்ணப்பிப்பதற்கு<br>1) விண்ணப்பதாரர் தேவையான சான்றுகளுடன் நேரிடையாக ஆன்–லைன் மூலமாக மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும்.<br>2) ஆன்–லைன் மூலமாக விண்ணப்பித்த பின்பு அதை பிரதி எடுத்து உரிய ஆவணங்கள் மற்றும் பதிவுக் கட்டணத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும். |
| 2.a | **இணையதள மூலமாக விண்ணப்பங்கள் பதிவு செய்யும் நாள்:**<br>**துவங்கும் நாள்: 15.07.2019, முடிவுறும் நாள்: 03.08.2019, மாலை 5.00 மணி வரை** |
| 2.b | **துணை கவுன்சிலிங் நடைப்பெறும் நாள் : MBA - 28.08.2019, MCA- 21.08.2019** |
| 3. | **பதிவுக் கட்டணம் :** விண்ணப்பதாரர் ரூ.300/–க்கான வரைவோலையை “The Secretary, TN MBA / MCA Admissions – 2019, GCT” payable at Coimbatore, என்ற பெயரில் பெற்று பதிவுக் கட்டணமாக விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பதிவுக் கட்டணமின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் காரணமின்றி நிராகரிக்கப்படும். ஆதிதிராவிடர் / பழங்குடியின மாணவர்களுக்கான விண்ணப்பம் ரூ.150/– (விண்ணப்பதாரர்கள் சுய சான்றொப்பமிட்ட ஜாதிச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்). |
| 4. | * **மேலும் விவரங்கள் அறிய** www.gct.ac.in / www.tn-mbamca.com இணையதள முகவரியில் “INFORMATION AND INSTRUCTIONS TO CANDIDATES” பக்கத்தில் பார்க்கவும். |
| 5. | ** முதன்மை கவுன்சிலிங் முடிந்து காலியாக உள்ள இடங்களுக்கு ஏற்கனவே Online மூலம் விண்ணப்பித்து கலந்தாய்வில் கலந்துக் கொள்ளாதவர்கள் மற்றும் TANCET தேர்வு எழுதி விண்ணப்பிக்காத மாணவர்கள் நேரடியாக கவுன்சிலிங் மையத்தை அணுகி துணை கவுன்சிலிங்கில் கலந்துக்கொள்ளலாம். |
| | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பதிவுக் கட்டணத்துடன் கீழ்க்காணும் முகவரிக்கு வந்து சேரவேண்டிய கடைசி நாள்: **03.08.2019**, மாலை **5.00 மணி** |
| | **விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :**<br>**செயலர்,**<br>**தமிழ்நாடு எம்.பி.ஏ. / எம்.சி.ஏ. மாணவர் சேர்க்கை – 2019**<br>**அரசினர் பொறியியற் கல்லூரி**<br>**கோயம்பத்தூர் 641013** |

தொழில் நுட்பக் கல்வி ஆணையர்(மு.கூ.பொ)

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**